திரு. வை. பாலசுந்தரம்: அந்த ஏரித் தண்ணீரை வயல் களுக்குப் பாய்ச்சுவதற்கு பயனபடுத்துகிறார்கள். இதனல் கூட அந்த ஏரியில் உள்ள வண்டல் மண் கழனிக்குப் பாய்ந்துவிடு வதால் அந்த ஏரி சத்து இழந்து விடுவதற்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. ஆகவே அந்த ஏரியில் இருநது தண்ணீரை வயல் களுக்குப் பாய்ச்சாத அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கனவே உத்தரவாதம் அளிக்கப்பட்ட பாசனப் பகுதிகள் சில இருக்கின்றன. அவற்றிற்கு சட்டப்படி நாம் தண்ணீர் அளித்துத்தான் ஆகவேண்டும்.

காடுகளிலுள்ள சிங்கங்கள்

* 526 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் பாதுகாப்பில் எத்தனைச் சிங்கங்கள் எங்கெங்குப் பாதுகாக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தமிழ்நாட்டிலுள்ள காடு களிலோ, அல்லது மாநில வனத்துறையின் பொறுப்பிலுள்ள மற்ற இடங்களிலோ, சிங்கங்கள் இல்லை.

Pedestrian crossing in Madras

* 527 Q.—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the authorities to prevent the indiscriminate crossing of roads by pedestrians in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை மாநகரிலுள்ள போக்குவரத்துக் காவல்படை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது—

(1) வகை தொகையற்ற முறையிலும், போக்குவரத்து விதி களைக் கவனிக்காமல் குறுக்கு நெடுக்காகவும் சாலையைக் கடந்து செல்லும் பாதசாரிகள் மீது வழக்குகள் தொடருவது மும்முர மாக்கப்பட்டுள்ளது.

1974 மார்ச் 29]

(2) வகை தொகையற்ற முறையில் அவ்வாறு சாலையைக் கடந்து செல்வதால் நேரிடும் ஆபத்து குறித்து மக்களுக்கு விளக்கிக் கூறும்பொருட்டு, ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட காவல் துறை வண்டிகளும் ஒலிபெருக்கிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

•(3) சாலைகளைக் கடந்து செல்கையில் பாதசாரி கடவுகளையும் (pedestrian crossings) சுரங்கப் பாதைகளையும் (sub-ways) பயன்படுத்துமாறு பள்ளிச் சிறுர்களுக்குத் தகுந்த அறிவுரை வழங்கப்படுவதுடன் பொதுமக்களுக்கு இது குறித்து அறிவுரை அளிக்கும் திரைப்பட ஸ்லைடுகள் (slides) திரைப்படக் கொட்டகைகளில் காட்டப்படுகின்றன.

(4) பாதசாரி கடவுகளையே பயன்படுத்துமாறு பத்திரிகைகள் வாயிலாகவும் அனைத்திந்திய வானொலி மூலமாகவும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது,

திரு. என். டென்னிஸ்: இவ்வித நடவடிக்கைகள் மேற்கொண்டும் அதிக வயலேஷன் இருக்கின்றனவே. ஆகவே இதைத் தீவிரப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தீவிரப்படுத்த வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமாகும். தீவிரப்படுத்துவதின் காரணமாக வழக்குகள்கூட கூடுதலாக ஆண்டுக்காண்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1971-ல் 2,736 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. 1972-ல் 10,030 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. 1973-ல் 10,295 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இவ்வளவு தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்தும்கூட போன ஆண்டை விட இந்த ஆண்டு அதிகப்படியான ஆக்ஸிடன்ட்ஸ் நடந்திருக்கின்றனவே, இதற்குக் காரணம் சர்க்கார் அமல் செய்யக்கூடிய விஷயத்தில் ஏதாவது தவறு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கிறேமோ அவ்வளவுக்கவ்வளவு வழக்குகள் அதிகமாகின்றன. ஆனல் விபத்துக்கள் அதிகமாகி

விட்டன என்று சொல்வதற்கில்லை. 1971-ல் 104 பேர்கள் இறந்திருக்கிறார்கள், 1972-ல் 115 பேர்கள் இறந்திருக்கிறார்கள், 1973-ல் 62 பேர்கள் என்ற தகவல்தான் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படி 'ஜே வாகிங்' என்று நடக்கக் கூடியவர்கள், வகைதொகை இல்லாமல் நடக்கக் கூடியவர்கள், ஆகியவர்களை 'மொபைல் கோர்ட்டில்' அந்தந்த மாலையிலேயே ஏதாவது தண்டனை கொடுப்பதற்கு வழிவகை செய்து இருக்கிறீர்களா? பிலிப்பைன்ஸ் நாட்டில் இப்படி ரோடின் குறுக்கே போகிறவர்களுக்கு சின்ன ஜெயில் மாதிரி முச்சந்தியில் வைத்து அங்கே ஒரு மணி நேரம் வரை வைத்துவிடுகிறார்கள், அந்த மாதிரி வழிமுறைகளை இங்கே செய்வதற்கு அரசு ஏதேனும் திட்டம் வைத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்படி வகைதொகையற்ற முறையில் போகின்றவர்கள் மீது உடனடியாக அபராதம் விதிக்கவேண்டுமென்ற அடிப்படையில், குறைந்தது ரூ. 10 அபராதம் விதிக்க வேண்டுமென்று, விதியைத் திருத்தலாமா என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. முச்சந்தியில் இப்போது விநயகர் கோவில்கள் தான் இருக்கின்றனவே தவிர, நாம் இதுபோன்று ஜெயில் வைப்பதற்கு இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்த பெடஸ்டிரியன் கிராஸ் டிவிஷனை அதிகமாக யூஸ் பண்ணாமல் மற்ற இடங்களில் ரோடை கடந்து செல்பவர்களுக்கு ரூ. 10 வரை அபராதம் விதிக்கலாம் என்று அரசு கருதுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மனிதர்களுக்கு தண்டனை விதித்து விடுகிறோம். ஆடுமாடுகள் மொத்தமாகவோ தனியாகவோ செல்கின்றனவே, அதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுக்கிறது, என்ன தண்டனை விதிக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவைகளை பிடித்துக் கொண்டு போய் அடைப்பதுதான் தண்டனை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்த விபத்துகளின் காரணமாக மாநிலத்தில் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி

1974 மார்ச் 20]

இறந்தவர்களின் எண்ணிக்கையை நாம் அறிந்து இருக்கும்போது அந்த இறப்புக்குக் காரணமாக உள்ளவர்கள் எத்தனை பேர், கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர், கண்டுபிடிக்கப்படாமல் 'ஹிட் அண்டு ரன்' என்ற வகையில் உள்ளவர்கள் எத்தனை பேர், இந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 'ஹிட் அண்டு ரன்' என்கிற வகையில் இருக்கிற எண்ணிக்கை வேண்டுமானால் தனிக் கேள்வி போடவேண்டும். இது பாதசாரிகள் பாதைகளைக் கடக்கிறபோது, அதற்கென்று வகுக்கப்படுகின்ற பாதையை விட்டு வேறு இடங்களில் ரோடைக் கடப்பதன் காரணமாகத் திடீரென்று ஏற்படுகிற விபத்துக்களின் எண்ணிக்கையாகும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, இப்போது பாதையைக் கடந்து செல்ல 'சப்-வேக்கள்' வைத்து இருக்கிறார்கள். அது சுத்தமாக இல்லை. இரவிலே சரியான விளக்குகள் இல்லாததன் காரணமாக இரவு நேரத்தில் அந்தப் பாதையைப் பயன்படுத்த அஞ்சுகிறார்கள். ஆகவே, அதற்கு காவலர்களைப் போடுவதற்கு அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சுத்தமாக வைத்துக்கொள்ளவில்லை என்று தகவல் இருக்குமானால் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இரவு நேரங்களில் நிச்சயமாக இவ்வளவு பெரிய நெரிசல் இருக்காது என்றுதான் நான் கருதுகிறேன்.

Season tickets in buses

* 528 *Q.*—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state whether season tickets are issued in the buses run by the State Transport Department and the Cheran, Cholan, Pandian and Anna Transport Corporations?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 231–234-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.